
மாலை முரசு

பக்கங்கள் 16+2

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 15 திங்கட்கிழமை 11.11.2024 | அதிர்வு 102

## தந்தையின் ஜீப் மோதி 3 வயது குழந்தை சாவு!



கொழும்பு, மருதானையில் ரயில் ஊழியர்களுக்கான வீட்டுத் தொகுதியில் ஜீப் ஒன்று வீடொன்றுக்கு அருகில் நிறுத்தச் சென்றபோது,

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# தமிழ்த் தேசியத்துக்கே தவறாது வாக்களியுங்கள்



## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் வலியுறுத்து

“தமிழ்த் தேசியத்துக்கு வாக்களியுங்கள்!” - என்று தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் தமிழ் மக்களைக் கோரியிருக்கின்றது.

இது தொடர்பாக அந்த இயக்கத்தின் தலைவர்

04 ▶




## அரசியல் பிழைத்தோர் புறக்கணிக்கப்படுவர்!



### பரப்புரையில் சிறீதரன் சுட்டிக்காட்டு

“தேர்தல் வெற்றிக்காக மிகக் கீழ்த்தரமான செயல்களை முன்னெடுக்கும் அரசியல் பிழைத்தோர்க்குக்

04 ▶



# தமிழ் வாக்காளர்கள் தமிழ் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை அளிப்பது இனவாதம் அல்ல!

## மனோ கணேசன் விளக்கம்



"தமிழ் வாக்காளர்கள் தமிழ் வேட்பாளர்களுக்கு முன்னுரிமை அளித்து தமது விருப்பு வாக்குகளை வழங்க வேண்டும் என்பது இனவாதம் அல்ல. அது இனப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் இன உரிமை ஆகும். உண்மையில், நடைமுறையில் உள்ள தேர்தல் முறையின் விருப்பு வாக்கு என்ற முறைமை அதைத்தான் வலியுறுத்துகின்றது. அதிலும் மிகக் குறிப்பாக தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, பதுளை ஆகிய மாவட்டங்களில் தமிழ் வாக்காளர்கள் தமது விருப்பு வாக்குகளைத் தமிழ் வேட்பாளர்களுக்கு மாத்திரம் வழங்குவது அத்தியாவசியமாகும். இதுவே எமது பிரதிநிதித்துவத்தைப் பெற்றுகொள்ள உள்ள ஒரே வழி. இதைத்தான் விகிதாசார தேர்தல் முறையும் வலியுறுத்துகின்றது."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

கொழும்பு கொச்சிக்கடை ஜம்பட்டா வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது:–

"தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, பதுளை ஆகிய மாவட்டங்களில் தமிழ் வாக்காளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய செயன்முறைமையை நான் எளிமையாக விவரிக்க விரும்புகின்றேன். முதலில் நமது வாக்காளர்கள், தமது மாவட்டங்ளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களில் வெற்றி பெறக் கூடிய அணி எது, அதன் சின்னம் எது எனத் தீர்மானிக்க வேண்டும்.

அதன் பின்னர், அந்த அணிக்குள்ளே இருக்கும் தமிழ் வேட்பாளரின் அல்லது வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களைக் கண்டறிய வேண்டும். அதன் பின்னர் தேர்தலின்போது வாக்குச்சீட்டில், தாம் தெரிவு செய்துள்ள சின்னத்துக்குப் புள்ளடியிட வேண்டும். பின்னர் தமிழ் வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களுக்குப் புள்ளடி இட வேண்டும். இதோடு இந்த வாக்களிக்கும் கடமை முடிகின்றது.

தமிழ் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை அளித்த பின்னர் விருப்பு வாக்குகள் மீதமாக இருக்குமானால், அந்த விருப்பு வாக்கை அந்த அணியின் தலைமை வேட்பாளருக்கு அளிக்கலாம். அளிக்காமலும் விடலாம். மூன்று விருப்பு வாக்குகளையும் பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயமல்ல.

முதலில், நாம் போட்டியிடும் தொலைபேசி சின்னத்துக்குப் புள்ளடியிடுவது கட்டாயம். பின்னர் தமிழ் வேட்பாளர்களின் விருப்பு வாக்கை அளியுங்கள். கொழும்பில் மனோ கணேசன் 11, லோஷன் 13, கேகாலையில் பரணி 5, இரத்தினபுரியில் சந்திரகுமார் 6, கம்பஹாவில் சசிகுமார் 18, கண்டியில் பாரத் 4, பதுளையில் பகிதரன் 4 ஆகிய விருப்பு வாக்கு இலக்கங்களுக்கு மாத்திரம் வாக்களித்து விட்டு வாக்களிக்கும் பணியை முடிவு செய்யலாம்.

தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, பதுளை ஆகிய மாவட்டங்களில் இதுவே நமது பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய எம் முன் உள்ள ஒரே ஜனநாயக வழியாகும்." – என்றார்.




## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தந்தையின் ஜீப்...**

சிறு குழந்தையொன்று ஜீப்பில் நசுங்கி உயிரிழந்துள்ளது.

மருதானை பகுதியில் உள்ள ரயில் வீட்டுத் தொகுதியில் வசித்து வந்த 3 வயது குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை வீட்டுக்கு அருகில் ஜீப் வாகனத்தை நிறுத்துவதற்குத் தந்தை பின்பக்கத்துக்குவாகனத்தைச்செலுத்திய வேளையில், பின்னால் வந்த அவரது குழந்தை வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நித்திரை கொள்ளும் பிரதிநிதிகளை இம்முறை தெரிவு செய்ய வேண்டாம்!

## மக்களிடம் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் கலைத்தேவன் கோரிக்கை

(கி.வசந்தன்)

"கொழும்பில் இருந்து கொண்டு மைக்கைக் காதிலே போட்டுக்கொண்டு நித்திரை கொள்கின்ற உறுப்பினர்களை இந்தத் தேர்தலில் தெரிவு செய்ய வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற வேட்பாளர் பா.கலைத்தேவன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வன்னியில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை பல்வேறு கட்சிகளின் பால் எமது மக்களை ஈர்த்துள்ளது. பெரிய பண முதலைகள் தமிழரசுக் கட்சியின் வாக்குக்களைச் சிதறடிப்பதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். எனவே, மக்கள் சிந்திக்க வேண்டும்.

ஒரு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரை தெரிவு செய்யும்போது அவர் நல்ல ஆளுமை உள்ளவரா என்று பார்க்கின்றோம். ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் என்பது எமது மாவட்டத்துக்கான பிரதிநிதிகளை அனுப்பும் தேர்தலாகும். மக்களின் பிரச்சினைகளைச் சரி செய்யக் கூடிய ஒருவராக அவர் இருக்க வேண்டும்.

கொழும்பிலே போய் இருந்து கொண்டு மைக்கைக் காதிலே போட்டுக்கொண்டு நித்திரை கொள்கின்ற உறுப்பினர்களைத் தயவு செய்து தெரிவு செய்ய வேண்டாம் என்று தமிழ் மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழரசுக் கட்சியானது பாரம்பரிய கட்சி. எமது இனத்தின் தனித்துவத்தைப் புறம்தள்ளி இலங்கை அரசியலை ஒருபோதும் செய்ய முடியாது. எனவே, இந்தத் தேர்தலில் ஆற்றல் உள்ள, ஊழல் செய்யாத புதியவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

எனவே, எமது வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து எனது வெற்றி இலக்கமான 7 இற்கும் வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்." – என்றார்.

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றும்

## இப்படி சிவசக்தி ஆனந்தன் நம்பிக்கை

(கி.வசந்தன்)

"வன்னியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே பலமான கட்சியாகப் போட்டியிடுகின்றது. அதுவே அதிக ஆசனங்களைக் கைப்பற்றும்."

– இவ்வாறு முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வன்னியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது இங்கு போட்டியிடுகின்ற கட்சிகளை விட அதிகூடிய வாக்குகளைப் பெற்று மூன்று ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருக்கின்றது.

இன்று தேர்தல் களத்தில் உள்ள கட்சிகளில் பலமான கட்சியாகவும், கூட்டணியாகவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே உள்ளது. கடந்த காலங்களில் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் பயணித்த அந்தக் கட்சி இன்று நிலைகுலைந்து சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது.

அந்தநிலையில் தமிழ் மக்களுக்காக இன்று இருக்கக்கூடிய மாற்றுத் தெரிவு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே. மக்களின் பல பிரச்சினைகள் இங்கு தீர்க்கப்படவில்லை. தங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க எந்தவொரு தரப்பும் முன்வரவில்லை என்று பொது மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

புதிய அரசு சோசலிசம், சமத்துவம் என்ற கொள்கையை முன்னிறுத்தி ஆட்சியை முன்னெடுக்கின்றது. இது சிங்கள மக்களுக்குப் பொருத்தமாக இருக்கும். இது தமிழ் மக்களுக்குப் பொருத்தமில்லாத ஒன்று.

எமக்கு நீண்டகாலப் பிரச்சினை உள்ளது. சுயநிர்ணய உரிமைக்காகத் தொடர்ச்சியாக எமது மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடைமுறைக்கு சாத்தியமான ஒரு விடயத்தை அரசு முன்னெடுக்க வேண்டும்."

– என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



# தமிழ்த் தேசியத்துக்கே தவறாது வாக்களியுங்கள்

வி.எஸ். சிவகரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:–

'மாற்றம்', 'ஊழலற்ற புதிய அரசியல் கலாசாரத்தை கட்டமைப்போம்', 'இலங்கையராக ஒன்றிணைவோம்' எனக் கவர்ச்சிகரமாக பன்மத்துவ இலங்கைத் தேசியவாதம் பேசி, முற்போக்கு இடதுசாரிச் சிந்தனைத்துவ ஆட்சிக் கட்டமைப்பு என வெற்றுக் கோஷத்தையும், போலி முகமூடியையும் அணிந்து கொண்டு ஜே.வி.பி. தனது இனவாதக் கோர முகத்தை தேசிய மக்கள் சக்தி எனும் கவசத்துக்குள் திரையிட்டு மறைக்க முனைகின்றது.

இலங்கையில் பௌத்த தேசியவாத இனவாதத்தை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்ததில் பெரும் பங்கு ஜே.வி.பிக்கு உண்டு.

2002 ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கைக்கு எதிராக இனவாத கோஷத்தை முன்வைத்து குழப்பியதில் இன்றைய ஜனாதிபதிக்கும் பெரும் பங்கு உண்டு. இவர்கள் ஒன்றும் மீட்பர்கள் அல்லர். பல மீட்பர்களை நாம் பார்த்து விட்டோம்.

ஒரு மாதத்திலேயே ஆட்சி கலகலத்து போய்விட்டது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கிய எந்த வாக்குறுதியையும் இதுவரை நிறைவேற்றவில்லை. தேர்தல் காலத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகையாக வழங்கப்பட்ட மதுபானச்சாலை அனுமதிக்குரிய பெயர் விவரங்களை வெளியிடுவதாகக் கூறினார்கள். வெற்றி பெற்றதும் உடனடியாக இரத்துச் செய்யவுள்ளனர் எனவும் தெரிவித்தனர். ஒரு சிலருடைய பெயரை மட்டுமே வெளியிட்டவுடன் அமைதியாகி விட்டனர். தூய வாதம் பேசியவர்கள் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் தெரிவில் இவர்களின் போலி ஊழல் ஒழிப்பு வாதம் என்பதற்கு இதுவே பெரும் சாட்சி.

தமிழர்கள் மத்தியில் படித்தவர்கள் எனச் சொல்பவர்கள் தமது சுயநலத்துக்காக மாற்றம் எனும் கோஷத்தை முன்னிறுத்துகின்றனர். அவர்களால் தமிழினத்துக்கு எந்த மாற்றமும் நிகழ்ந்து விடாது. தேர்தல் வரலாற்றில் என்றும் இல்லாதது போல் எண்ணற்ற கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் களத்தில் உள்ளன. வெளிநாட்டுப் பண முகவர்களும் புலம்பெயர்ந்த தேசத்தவர்களும் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் மோதுண்டு பல அணிகளாகப் பிரிந்து நின்றாலும் தமிழ்த் தேசியம் எனும் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை நாம் இழக்க முடியாது. இன்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளும் அதில் உள்ள நபர்களும் சோரம் போகலாம். ஆனால், தமிழ்த் தேசியம் எனும் உயரிய இலக்கில் இருந்து நாம் ஒவ்வொரு சாதாரண குடிமகனும் உள்ளத்தால் கூட மாற்றிச் சிந்திக்க முடியாது.

இன விடுதலை அரசியலுக்காக நாம் இழந்தவை அதிகம். இன்னும் இழப்பவை அதிகமாக இருந்தாலும் நாம் தமிழ்த் தேசியத்தைக் கடந்து கடுகளவும் நகர முடியாது. அது வரலாற்றுத் தவறாக மாறிவிடும். கடந்த காலத்தில் வினைத்திறனற்று செயற்பட்ட மக்கள் பிரதிநிதிகளை நிராகரியுங்கள். பணத்துக்கோ, பதவிக்கோ, சலுகைக்கோ, சமயத்துக்கோ, சாதியத்துக்கோ, சாராயத்துக்கோ, அபிவிருத்திக்கோ வாக்களிக்க முயலாதீர்கள்.

நான் ஏன், எதற்கு உங்களுக்கு வாக்களிக்க வேண்டும்? எனும் கேள்வியை ஒவ்வொரு வாக்காளனும் மனதில் நிறுத்திக்கொள்ளுங்கள். உங்களை யார் ஆள வேண்டும் எனும் உரிமையை அற்ப நபர்களுக்கு விற்றுவிடாதீர்கள்.

நாங்கள் நாங்களாகவே இருப்போம். எதற்காகவும் தமிழ்த் தேசியத்தை நிராகரிக்க முனையாதீர்கள். உங்கள் வாக்கு தடம் மாறாத இருப்பைத் தனதாக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகளுக்காக இருக்கட்டும். எமக்குள் உள்ள உட்பகையை நாமே தீர்த்துக் கொள்ளலாம். எதிரிக்கு எந்த வாய்ப்பும் வழங்கி விடாதீர்கள். தேசம் பறிபோய் விட்டது. தேசியத்தையாவது எமதாக்கிக் கொள்வதற்காக தேசிய உணர்வோடு வாக்களியுங்கள். அதுவே நாம் இந்த இனத்துக்கும் இந்தத் தேசத்துக்கும் செய்யும் பாரிய அர்ப்பணிப்பும் தியாகமும் ஆகும். – என்றுள்ளது.

---

### அரசியல் பிழைத்தோர்...

காலமும் இயற்கையும் அறத்தின் பாற்பட்ட விளைவுகளை மீளளிக்கும் போது, அத்தகையவர்கள் மக்கள் மனங்களிலிருந்தும், அரசியல் அரங்கிலிருந்தும் அடியோடு புறக்கணிக்கப் படுவார்கள்."


– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அவரை ஆதரித்து கிளிநொச்சி பாரதிபுரம் வட்டாரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தத்தமது தனிமனித நலன்களை முன்னிறுத்தியும், தனிப்பட்ட வெற்றி ஒன்றே நோக்கம் எனவும் தேர்தல் அரசியலை முன்னெடுக்கும் சிலர், தனிமனிதர்கள் மீதான சேறுபூசல்களையும், அவதூறு பரப்பலையுமே தமது இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றார்கள்.

அரசியலை வாழ்வாக வரித்துக் கொண்டவர்களின் சிந்தனையும் செயல்நோக்கும் அறவழிப்பட்டதாகவும், மக்கள் விரோதமற்றதாகவும் இருக்க வேண்டும். அத்தகைய அறம்சார் அரசியலை முன்னெடுப்பவர்களால் மட்டுமே மக்கள் மத்தியில் நிலைபெற முடியும்." – என்றார்.


சரணாகதி அரசியலும் இல்லமால்,
சாத்தியமில்லா அரசியலும் இல்லாமல்,
சரி சமமாய் அரசியல் செய்ய ...
M.A.சுமந்திரன்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
1
ஆட்புலம் -ஆதாரம் -ஆளுகை




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமிழ்த் தேசியம் பேணுவோம்!

தமிழ் அரசியல்வாதிகள் எல்லோரும் சுட்டிக் காட்டுவது போல ஒரு மிக முக்கியமான தேர்தலை தமிழர் தாயகம் இப்போது எதிர்கொள்கின்றது. இன்னும் மூன்று நாள்களில் வாக்களிப்பு. எந்தத் திசையை நோக்கி வாக்களிப்பது என்பதைத் தமிழர்கள் தீர்மானிக்க வேண்டிய காலகட்டம் இது. எமது செல்நெறியை நாம் உறுதிப்படுத்த வேண்டிய வேளை இது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் சில விடயங்களை தமிழர் தாயகத்துக்கு - தமிழ் தேசியம் பற்றி சிந்திக்கின்ற தமிழ் மக்களுக்கு - விளக்கியிருக்கின்றார். அவை கவனிக்கப்பட வேண்டியவை.

தமிழ்த் தேசிய சிந்தனையில் குழப்பங்களை ஏற்படுத்தும் கவனக் கலைப்பான்கள் - கவர்ச்சிகரமான பன்மைதுவ இலங்கை தேசியவாதம் பேசி, நம்மை குழப்புகின்றன என்பதை அவர் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றார்.

‘மாற்றம்’, ‘ஊழலற்ற புதிய அரசியல் கலாச்சாரத்தை கட்டமைப்போம்’, ‘இலங்கையராக ஒன்றிணைவோம்’ - என்ற இலங்கைத் தேசியவாதம் பேசியபடி, முற்போக்கு இடதுசாரி சிந்தனைத்துவ ஆட்சிக் கட்டமைப்பு என வெற்றுக் கோஷத்தையும், போலி முகமூடியையும் அணிந்து கொண்டு, ஜே.வி.பி. தனது இனவாதக் கோர முகத்தை தேசிய மக்கள் சக்தி என்னும் கவசத்திற்குள் திரையிட்டு மூடி மறைக்க முனைகிறது என்று அவர் சொல்லுவது மிக ஆழமாக சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இன்று ஆட்சித் தலைவராக மக்கள் முன் மாய்மாலம் காட்டும் அநுர குமார திஸநாயக்கவிற்கும் அவரது ஜே.வி.பிக்கும் இலங்கையில் பௌத்த - சிங்களத் தேசிய இனவாதத்தை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்ததில் பெரும் பங்கு உண்டு என்ற அவரது குற்றச்சாட்டு மறுக்க முடியாதது.

2002 ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கைக்கு எதிராக - அந்த அமைதி முயற்சியை நாசப்படுத்தும் விதத்தில் - இனவாதக் கோஷத்தை முன்வைத்துக் குழப்பியதில் இன்றைய ஜனாதிபதிக்கும் பெரும் பங்கு உண்டு என்று அவர் சுமத்தும் குற்றச்சாட்டு கவனிக்கப்பட வேண்டும்.

இன்று சமாதான வேடமணிந்து, அமைதி தேவனாக நமக்குக் காட்சியளிக்கும் அநுர குமார திஸநாயக்க அன்று தமிழரின் பேரம் பேசும் சக்தி அழிக்கப்படுவதற்காக அசுர உருக்கொண்டு நின்றவர் என்பதை நாங்கள் மறந்து விட முடியாது.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி, வழிநடத்த வேண்டிய தரப்புக்கள் தங்களுக்குள் மோதி, பல அணிகளாகப் பிரிந்து நின்றாலும், தமிழ்த் தேசியம் என்னும் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை விட்டு நாம் விலக முடியாது என்று தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் சுட்டிக் காட்டுவது முற்றிலும் உண்மை.

இன விடுதலை அரசியலுக்காக நாம் இழந்தவை அதிகம். இன்னும் இழப்பவை அதிகமாக இருந்தாலும் நாம் தமிழ்த் தேசியத்தைக் கடந்து கடுகளவும் நகர முடியாது. அப்படி நகர்வது வரலாற்று தவறாகிவிடும் என்று அவர் தெரிவிப்பதில் ஆழமான அர்த்தங்கள் உண்டு.

தமிழ் தேசியத்தின் தடத்தில் தமிழர்களை வழிநடத்துபவர்களில் தவறு இருக்கலாம். அத்தகையோரை நிராகரிப்பதற்கான தேர்தலாக இது இருக்கலாம். ஆனால் தமிழ் தேசியத் தளத்தை நிராகரிக்கும் வெளிப்பாடாக இத்தேர்தல் அமைந்து விடக்கூடாது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் சுட்டிக்காட்டுவது போல தமிழர் தேசிய தரப்புகளுக்கு உள்ளேயுள்ள உட்பகையினை நாமே தீர்த்துக் கொள்வோம். அதற்காக எதிரிக்கு எந்த வாய்ப்பும் வழங்கி விடக் கூடாது.

அவர் சுட்டுவது போல தேசம் பறிபோய் விட்டது. தேசியத்தையாவது நமதாக்கி காப்பதற்காக நாம் தேசிய உணர்வோடு வாக்களிக்க வேண்டும். அதுவே நாம் எமது இனத்திற்கும், இந்தத் தேசத்திற்கும், இந்தத் தமிழ் தேசத்திற்காகவும் தேசியத்திற்காகவும் தங்கள் உயரிய உயிரை அர்ப்பணித்த தியாகிகளுக்கும் நாம் செய்யும் சமர்ப்பணமாகவும் இருக்கும்.




# அம்பாறையில் தமிழரசின் வெற்றி 100 வீதம் உறுதியாகிவிட்டது!

## காரைதீவில் வேட்பாளர் ஜெயசிறில் நம்பிக்கை

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெற்றி நூறு வீதம் உறுதியாகிவிட்டது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளரும் முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசு கட்சியில் திகாமடுல்ல தேர்தல் தொகுதி வீட்டு சின்னம் இலக்கம் 5 இல் போட்டியிடும் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் தேர்தல் பிரச்சார அலுவலகம் நேற்று (10) ஞாயிற்றுக்கிழமை காரைதீவு பிரதான வீதியில் வெகு விமர்சையாக திறந்து வைக்கப்பட்டது.

ஒலிபெருக்கிவசதி பொலிசாரால் மறுக்கப்பட்ட நிலையில் இங்கு கூட்டம் இடம்பெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச உப தலைவரும் முன்னாள் உப தவிசாளருமான கணபதிப்பிள்ளை தட்சணாமூர்த்தி தலைமையில் இத் திறப்பு விழா மக்கள் வெள்ளத்தின் மத்தியில் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரச்சார பணிமனை முறையான அனுமதியுடன் இன்று திறக்கப்படுகிறது. இருந்த பொழுதிலும் பொலிஸார் மற்றும் தேர்தல் திணைக்களத்தால் பாரதூரமான தடைகள் விதிக் கப்பட்டன. இருந்த பொழுதிலும் பொலிஸாருக்கு நான் நன்றி கூறுகின்றேன். அது அவர்களது அரச பணி.

இன்று நாங்கள் எமது பிரதிநிதித்துத்தை சிங்களம் அல்லது முஸ்லிம் மக்களிடம் இருந்து பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை . ஆனால் எமது பச்சோந்திகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

எது எப்படி இருப்பினும் இன்றைய இந்த சவாலான திறப்பு விழா எமது தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தி விட்டது.

காரைதீவு மண்ணிலிருந்து மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இந்த சனத்திரளை பார்த்தவர்கள் பொறுக்க முடியாமல் முறைப்பாடுகளை தெரிவித்து இந்த ஒலிபெருக்கியை அணைக்கப் பார்த்தார்கள். இந்த காரைதீவு மண்ணிலே நான் செய்த பணி யாரும் செய்திருக்க மாட்டார்கள்.

இங்கே கடந்த வாரம் சங்கு அலுவலகம் திறந்து வைக் கப்பட்டது. அவர்களும் இதே மாதிரியான அனுமதியைத்தான் பெற்று இருந்தார்கள். ஆனால் அங்கு ஒலிபெருக்கி பாவிக்கப்பட்டது. பதாதைகள் வைக்கப்பட்டு அனைத்தும் நடந்தன. அதுவும் பிரதான வீதியில்தான் உள்ளது.

இங்கு மட்டும் ஏன் இந்த அராஜகம் கெடுபிடிகள் ? தமிழரசுக்கட்சி மீண்டும் வெற்றி பெற்றிருக்கின்றது என்பதனையை இது கட்டியம் கூறிக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் உண்மையான நேர்மையான அரசியல் செய்து கொண்டிருக்கிறோம். நாம் யாருக்கும் பயப்பட போவதில்லை. ஒருபோதும் பயமும் இல்லை.பயந்தவனும் இல்லை. நான் இங்கு மட்டும் அல்ல மாவட்டம் பூராக செய்த சேவைகளை உலகறியும். மக்கள் நன்கு அறிவார்கள்.

பணிமனை திறப்புக்கு தடை ஏற்படுத்தலாம். ஆனால் எனது உயிரினும் மேலான தமிழ் மக்கள் நவம்பர் 14 ஆம் திகதி தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க இருக்கின்றார்கள். இதனை யாராலும் தடுக்க முடியுமா?

எதிர்வரும் 16 ஆம் திகதிக்குப் பிறகு யாரையும் இங்கு காண முடியாது. யாரும் வரமாட்டார்கள். ஆனால் நாங்கள் களத்தில் நிற்போம்.

எத்தனை தடைகள் வந்தாலும் அத்தனையும் உடைத்து எறிந்து காரைதீவு மண்ணையும் எல்லையையும் மக்களையும் பாதுகாப்பேன். அதேபோன்று அம்பாறை மாவட்ட தமிழ் மண்ணை மக்களையும் பாதுகாப்பேன்.- என்றார் .

WELL-WISHERS OF TAMILS IN SRI LANKA

இலங்கைவாழ் தமிழர் நலன்விரும்பிகள்

International Network | Melbourne, Australia | சர்வதேச வலையமைப்பு

# மாற்றத்தை விரும்பின் அதை முன்வைப்போரை ஆதரிப்பதே இக்காலத்தில் ஒரே மார்க்கமாகும்

## தமிழர்கள் நலன் விரும்பிகள் அமைப்பு இப்படி வலியுறுத்தல்

மாற்றத்தை நாம் விரும்பினால் அதை முன்வைப்போரை ஆதரிப்பதே காலத்தின் தேவை என்று இலங்கை வாழ் தமிழர்கள் நலன் விரும்பிகள் அமைப்பின் சர்வதேச ஒருங்கிணைப்பாளரான – மெல்பனைச் சேர்ந்த – ராஜ் சிவநாதன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்க்சியின் விவரம் வருமாறு:–

கடந்த காலத்திலேயே புதைந்து நின்று, நிகழ் காலத்தைப் புரிந்துகொள்ளத் தவறினால், வருங்காலத்தையும் தொலைத்துவிடுவோம்.

அன்பார்ந்த இலங்கைவாழ் தமிழ் மக்களே!

மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை சந்திக்கவிருக்கும் இவ்வேளையில், மகத்தான ஜனநாயகக் கடமையை நீங்கள் செய்யவிருக்கும் தருணத்தில், எம் எண்ணக்கருக்கள் சிலவற்றை உங்கள் சிந்தனைக்கு முன்வைக்க விரும்புகிறோம்.

ஈராண்டுகளுக்கு முன் நாட்டில் சர்வாதிகாரம் தவறி, பொருளாதாரம் முன்னெப்போதும் காணாதளவு வீழ்ச்சியடைந்து, மக்களெழுச்சி ஆட்சிமாற்றத்தைத் தோற்றுவித்த போது, அதில் தமிழர் தாயக மக்களின் பங்கு மிகச்சிறிதளவே இருந்தது. அந்த இருண்ட அத்தியாயத்திலிருந்து இனவாத அரசியலை முடிவுக்குக் கொண்டுவந்து, சமத்துவத்தை வளர்த்து, ஊழலை ஒழித்து, நாட்டைக் கட்டியெழுப்புவேன் என்று இலங்கையர்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை வழங்குகின்றவராக புதிய தலைவர் அநுரகுமார திஸா நாயக்க தோன்றினார். அவருடைய தெரிவிலும் தமிழர் தாயகத்தினர் அவர்தம் அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு காரணமாக சொற்ப ஈடுபாடே காட்டினர். இந்த நிலைப்பாடு பொதுத்தேர்தலிலும் தொடரவேண்டுமா?

தமிழ் மக்களின் தேவைகளும் கவலைகளும் பற்பல. அவர்கள் நாளாந்த வாழ்வில் மலிந்திருக்கும் வலிகள் தீர்க்கப்பட வேண்டும், சுமைகள் குறைக்கப்பட வேண்டும். தேசியம் மட்டுமே பேசிப்பேசி, அதை அடையாது போனதுக்கு காரணம் தேடுவதும், எதற்கும் ஒருவேளை வரும் என்று காலவரையின்றித் தள்ளிப்போடுவதும், தேர்தல் காலங்களில் மட்டும் கோஷ அரசியல் செய்வதும், அதன்பின் செய்வதென்ன என்று திட்டமிடாது பயணிப்பதும் 'தமிழ்த் தேசியத்தை' முன்னெடுத்துச் செல்லாது.

ஒரு காலத்தில் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த யாழ் மாவட்டம் மக்கள் தொகை வீழ்ச்சியால் இப்போது 6 ஆகக் குறைந்துள்ளது. கற்றவர்களும் இளைஞர்களும் வகை தொகை இன்றி வடகிழக்கில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்க, முதியோர் தனிமையில் வாடுவதும், உழைப்போர் ஏழ்மையில் உழல்வதும், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தவிப்பதும் நீடித்துக்கொண்டே போகிறது.

இச்சூழலில், தென் இலங்கையில் ஏற்படும் கணிசமான அரசியல் மாற்றங்களையும், மக்களிடையே குறிப்பாக இளைய சமுதாயத்தவர்களிடம் அரும்பிவரும் முற்போக்கு சிந்தனைகளையும் கருத்தில் கொண்டு, மாற்றத்தை எதிர்பார்த்துக் கைகட்டி நில்லாது அதை உருவாக்குவதில் கைகொடுப்பவர்களாகவும், முழு நாட்டின் நன்மைக்கும் பங்காளிகளாகவும் நம்மை ஆக்கிக்கொள்வதே இவ்வாரத் தேர்தலில் தமிழர் நமக்குள்ள தலையான பொறுப்பாகும்.



நேர்மையிலும் இன ஒற்றுமையிலும் வேரூன்றிய தொலைநோக்குப் பார்வை கொண்ட ஜனாதிபதி திஸா நாயக்க, தேசிய மக்கள் சக்தி ஊடாக ஒற்றுமை மற்றும் அதிகாரமளித்தல் மூலம் (empowerment) இலங்கையர்கள் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஒரு பாதையை வழங்குகிறார். இதைப் புரிந்துகொண்டு நம் பாதையை சற்று திருத்திக்கொண்டால், சிறுகச்சிறுக தமிழர் தாயகத்தை பொருளாதாரத்தில் மேம்படுத்துவது மட்டுமன்றி தமிழர் அடையாளத்தையும் காப்பாற்றிக்கொள்ளலாம்.

மேலும், இனவிகிதாசார மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டமிட்ட குடியேற்றங்கள் தமது ஆட்சியில் இடம்பெறாது என்றும், தமிழ் மக்களுடனான அரச தொடர்பாடல் அனைத்தும் தமிழிலேயே செய்யப்படும் என்றும், அனைத்து இன மக்களும் தமது அடையாளங்களுடனும் தமக்கான கலாச்சாரங்களுடனும் கௌரவமாக வாழ்வதை உறுதிப்படுத்துவோம் என்றும் தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

எனவே, சிறுத்தை தன் புள்ளிகளை ஒருபோதும் மாற்றாது என்று இருந்துவிடாது, சிங்களம் தமிழர்க்கு ஒன்றுமே தராது என்று சொல்லிக்கொண்டே அரசியலில் பிழைக்காது, கிடைக்கும் சந்தர்ப்பத்தை நன்குணர்ந்து சரியாகப் பயன்படுத்தினால், நம் மக்களின் தலைவிதியை நாம் மாற்றியமைக்கலாம். 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' அல்லவா?

ஈற்றில், 'மக்களுக்காகவே' தேசியம் அன்றி 'தேசியத்துக்காக' மக்கள் அல்ல. அன்றாட வாழ்வுடன் திண்டாடிக் கொண்டிருப்போரின் நிலையை மாற்ற ஒரு இடைவெளி தேவை. அந்த இடைவெளிக்கு சற்று இடம் கொடுங்கள். பொருளாதார மாற்றத்தால் அதை நிரப்ப வழிவிடுங்கள். புதிய, இளைய சமுதாயம் புதிய மாற்றுவலிகளால் அதை சீர்படுத்த உதவுங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, உலகத்தை நம்பியும் பூகோள அரசியலில் தங்கியும் இனியும் வாழாது, புதிய உலக ஒழுங்கு எது என்பதைப் புரிந்து, யதார்த்த அரசியலில் (Realpolitik) பயணிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. மக்களை மனதில்வைத்து, இதய சுத்தியுடனும் ஆற்றலுடனும் செயலாற்றி, காலத்தின் தேவையுடன் பயணிக்க வல்லவர்களைத் தெரிந்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள். உங்கள் பொன்னான வாக்குகளை மேலும் பெறுமதியானதாக மாற்றுங்கள். – என்று அதில் கூறப்பட்டுள்ளது.




# இந்திய ரோட்டரிக் கழகத்தினர் திருகோணமலைக்கும் விஜயம்

(ஹஸ்பர்)

இந்தியாவில் இருந்து 30 இற்கும் அதிகமான ரோட்டரி அங்கத்தவர்கள் திருகோணமலை ரோட்டரி கழக இல்லத்துக்கு வருகை தந்தனர்.

முன்னாள் ஆளுநர் சம்பத்குமார் தலைமையில் 3231 ஆளுநர் ராஜன் பாபு மற்றும் தமிழ்நாட்டில் உள்ள ரோட்டரி கழக தலைவர்களும், அங்கத்தவர்களும் இணைந்திருந்தார்கள்.

இந்த வைபவத்தில் திருகோணமலை ரோட்டரிக் கழகத் தலைவர் ஜெகதீசன், கழகம் சார்பில் வரவேற்பு உரை நிகழ்தினார். அவர்களது வருகையை நினைவு கூரும்படி குச்சவெலி விவேகானந்தா கல்லூரி மாணவர்களுக்கு 60 பாதணிகள் வழங்கப்பட்டன.

முன்னாள் ஆளுநர் சம்பத்குமார் தமது உரையில் திருகோணமலை ரோட்டரி கழக சேவைகளைப் பாராட்டி தொடர்ந்து இணைந்து செயற்படவிரும்புவதாக கூறினார். 3231 ஆளுநர் ராஜன் பாபு மற்றும் தமிழ்நாட்டில் உள்ள ரோட்டரி கழகத் தலைவர்களும் உரையாற்றினர்.














# இ.தொ.கா. வேட்பாளர்களை ஆதரித்து ரணில் பரப்புரை!

(க.கிஷாந்தன்)

பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடும் இ.தொ.கா. வேட்பாளர்களை ஆதரித்து, முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று (10) கொட்டகலை சி.எல்.எப். மைதானத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டு வேட்பாளர்களுக்காக பரப்புரை முன்னெடுத்தார்.

இந்தப் பிரச்சார கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்ரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல், பிரதி தலைவர்களான கணபதி கனகராஜ், அனுஷியா சிவராஜா நோர்வூட், கொட்டகலை, மஸ்கெலியா ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்களான ரவி குழந்தைவேல். ராஜமணி பிரசாத், திருமதி செண்பகவள்ளி, ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் கே.கே.பியதாச உள்ளிட்ட மாவட்ட வேட்பாளர்களும் மற்றும் பெருந்திரளான ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தின்கீழ் இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், தேசிய அமைப்பாளர் சக்திவேல் ஆகியோர் இ.தொ.கா. சார்பில் களமிறங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.









# சாய்ந்தமருதில் சிராஸ் மீராசாஹிப்புக்கு ஆதரவாக நடந்த மகளிர் எழுச்சி மாநாடு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

திகாமடுல்ல மாவட்ட கல்முனைத் தொகுதியின் மரச்சின்னத்தில் 03 ஆம் இலக்கத்தில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கலாநிதி சிராஸ் மீராசாஹிபை ஆதரித்து அவருடைய இல்லத்தில் "மாபெரும் வெற்றி மகளிர் மாநாடு" சிராஸ் மீராசாஹிபின் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்றது.

பல்லாயிரக்கணக்கான பெண்கள் சாய்ந்தமருதில் கலந்து கொண்ட இந்த நிகழ்வானது, பொதுத் தேர்தலில் போட்டியிடும் சிராஸ் மீராசாஹிபின் வெற்றியை நிச்சய வெற்றியாக உறுதிப்படுத்திய நிகழ்வாக அமைந்திருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

எங்கும் சனத்திரள் நிறைந்த நிகழ்வாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

# ஜனாதிபதியுடன் நாமும் சேர்ந்து மாற்றத்துக்கு வேலை செய்வோம்

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் கணேசநாதன் சபேசன்

(வாஸ் கூஞ்ஞ)

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஊழலற்ற ஒரு நல்ல ஜனாதிபதி எமக்குக் கிடைத்துள்ளார். ஆகவே நாமும் அவருடன் சேர்ந்து மாற்றத்துக்காக வேலை செய்யவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் கணேசநாதன் சபேசன் தெரிவித்தார்.




மன்னார் தனியார் விடுதியொன்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் கணேசநாதன் சபேசன் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஊழலற்ற ஒரு நல்ல ஜனாதிபதி எமக்குக் கிடைத்துள்ளார். ஆகவே நாமும் அவருடன் சேர்ந்து மாற்றத்துக்காக வேலை செய்யவேண்டும்.

அந்த வகையில் வன்னித் தேர்தல் தொகுதியில் 9 வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளோம்.

காலம் காலமாக ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தலிலும் பழைய அரசியல்வாதிகள்தான் தொடர்ந்தும் வந்து கொண்டு இருக்கிறார்கள். 'இன்றைக்கு மன்னார் மாவட்டத்தை எடுத்துகொண்டால், அடைக்கலநாதன், ரிஷார்ட், போன்றோர் தொடர்ந்து 20, 30 வருடங்களாகத் தங்களுக்கே எழுதிக் கொடுத்தது போன்று மீண்டும் மீண்டும் பதவிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் தாங்கள் செய்யும் சட்டவிரோதத் தொழில்களைக். காப்பாற்றிக் கொள்ளத்தான் இவ்வாறு தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்கிறார்களோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

மன்னார் மக்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். பொய வார்த்தைகளை நம்பி அவர்களுக்கு வாக்களிக்கக் கூடாது.- என்றார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீரசிங்கம் ஆனந்தசங்கரி,

மீண்டும் மீண்டும் நாடாளுமன்ற உறுபினர்களாக வந்தவர்கள் மக்களுக்கு என்ன செய்தார்கள்? அவர்கள் கையும் சுத்தமில்லை. இதயமும் சுத்தமில்லை.

எத்தனையோ கொலைகள் கொள்ளைகள் நடந்துள்ளன. அவற்றை நான் குறிப்பிட விரும்பவில்லை. இப் போது எல்லோரும் உத்தமர்களாகி விட்டார்கள். நான் இன்றுவரை பொய் சொன்னது கிடையாது. களவெடுத்தது கிடையாது. மக்களை ஏமாற்றி லஞ்சம் வாங்கியது கிடையாது. ஆனால் என்னைத் துரோகி என்கிறார்கள்.

ஒவ்வொரு வேட்பாளர்களும் தங்கள் வரலாறுகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும். மக்களுக்குத் தெரியும் இந்த நாட்டிற்குத் துரோகம் இழைத்தவர்கள் யாரென. எனவே மக்கள் சிந்தித்தால் சரியானவர்களைத் தெரிவு செய்வார்கள்.- என்றார்.





# முன்பள்ளியின் ஆண்டு விழா!

(மட்டு. துஷாரா, அபு அலா )

மட்டக்களப்பு லிட்டில் பேட்ஸ் வை.எம்.சி.ஏ. முன்பள்ளியின் ஆண்டு விழா நேற்று முன்தினம் (09) தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெற்றது.

லிட்டில் பேட்ஸ் வை.எம்.சி.ஏ. முன்பள்ளி பட‌சாலையின் அதிபர் திருமதி எம்.காலிதா தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட வலய கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி அனுரேகா விவகாந்தன் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக இலங்கை மேம்பாட்டு தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி எச்.பி.மின்னொளி மற்றும் பெரிய உப்போடை லூர்து அன்னை தேவாலய அருள்தந்தை விரைனர் செலார் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, முன்பள்ளி மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசுப் பெதிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் போன்றவற்றை பிரதம அதிதி, கௌரவ அதிதிகள் வழங்கி வைத்தனர்.











# தேசிய மட்டத்தில் முதலிடங்கள்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலையில் நேற்று (10) நடைபெற்ற அகில இலங்கை பரத நாட்டிய போட்டியில் முல்லைத்தீவு வலயத்தில் இருந்து கலந்து கொண்ட வற்றாப்பளை மகா வித்தியாலயத்தின் கொற்றவையாடல், மல்லாடல் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளும் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

# புனித மாவீரர்களுடைய தினத்தை அரசியலுக்காக வியாபாரமாக்காதீர்!

## சங்கு வேட்பாளர் பிரகாஷ் வேண்டுகோள்




(வி.ரி.சகாதேவராஜா)

ஒவ்வொரு தமிழனின் இதயத்திலும் நீங்கா இடம் பெற்ற புனித மாவீரர் தினத்தை அற்ப அரசியலுக்காக வியாபாரமாக்காதீர்கள்.

இவ்வாறு பாண்டிருப்பில் நேற்று முன்தினம் (9) சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் உரையாற்றிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் இராஜகுமார் பிரகாஷ் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

75 வருட கால புரையோடிப் போய் இருக்கும் எங்களது அரசியல் வரலாற்றில் நாங்கள் எப்போதும் மறக்க முடியாத நினைவாக இருக்கின்ற ஒரு உன்னதமான நாள்தான் கார்த்திகை 27. புனித மாவீரர் நாள்.

இந்த தினத்தை தற்போது கடந்த காலங்களில் அரசுடன் நின்று கொண்டு 50 : 50 எனும் உடன்படிக்கையில் பணியாற்றியவர்கள். அதன் மூன்றாவது சைக்கிள் தலைமுறையினர் தற்போது நாங்கள் மாவீரர்கள், நாங்கள் எங்களது உணர்வை காட்டுகின்றோம், எங்களது தேசியத்தை வெளிப்படுத்துகின்றோம் எனக் கூறிக்கொண்டு வருகின்றார்கள்.

வடக்கில் ஏழு மாவீரர் துயிலும் இல்லங்கள் இருக்கின்றன. ஆனால் இவர்கள் அங்கிருந்து அம்பாறை மாவட்டத்தில் உள்ளது ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லமான கஞ்சி குடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்துக்கு வருகிறார்கள். ஏன் என்றால் இவர்கள் அரசியல் செய்யவே வருகின்றார்கள்.

ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களோ எந்தவிதமான முன்னெடுப்புகளையும் எவரும் செய்யவில்லை.

ஆனால் இந்த மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு இங்கு வந்துள்ளது. தலைவராக சுப்ரமணியம், செயலாளராக குட்டிமணி மாஸ்டரும் நீண்ட காலமாக இந்த விடயத்தைக் கையில் எடுத்து எந்த விதமான சலசலப்புகளும் இன்றி எந்தவிதமான பெருமைத்தனங்களும் இன்றி எந்த விதமான விளம்பரங்களும் இன்றி இதை மனதார உளமார இதை செயல்படுத்தி வருகின்றார்கள்.

ஆகவே கடந்த ஓரிரு ஆண்டுகளாக புதிதாக முளைத்த சைக்கிள் அரசியல்வாதிகள் இதை நீங்கள் உங்களது அரசியல் லாபத்துக்காகவும் புலம்பெயர் தேசத்தில் உள்ள மக்களிடம் நிதி வாங்குவதற்காகவும் இந்த இடத்தை இந்த புனித பூமியை புனித மண்ணை புனித நாளை பயன்படுத்த வேண்டாம் என்பதை நான் ஆணித்தரமாக கூறிக் கொள்கின்றேன்.

உங்களுக்கு தெரியும் இந்த கார்த்திகை மாதம் என்றாலே எங்களுக்கு ஞாபகம் வரும் கார்த்திகை 27. இது எக்காலத்திலும் எத்தனை தலைமுறைகள் வந்து போனாலும் எத்தனை மாதங்கள் நாங்கள் கடந்து சென்றாலும் எங்களது நெஞ்சில் ஆறாத வடுவாக எங்களது உள்ளத்தை போட்டு குடைந்து கொண்டு வருத்திக்கொண்டு எங்களை தினம் தினம் வேதனைப்படுத்தி கொண்டு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும் விடயம்.

எதிர்வரும் கார்த்திகை 27 அன்று நாங்கள் அந்தப் புண்ணிய பூமியில் எங்களது தமிழ் இறந்த உறவுகள் எங்களது சரீரத்தின் ஒரு பாகமாக எங்களுக்காக மண்ணில் மடிந்த மாவீரர்களை நாங்கள் நினைவு கூருவதற்கு காத்திருக்கின்றோம். மக்களாக எங்களோடு ஒன்று சேருங்கள். அடுத்ததாக இந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களது தாய்மாரை நான் ஒரு கணம் கௌரவிக்கின்றேன். ஏனெனில் கடந்த காலங்களில் எங்களின் மாவீரர் துயிலும் இல்லங்களில் அவர்கள் அவர்களது பாரிய பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். அதை நாங்கள் மறந்து விட முடியாது. நான் அவர்களுடனும் பயணிக்கும் ஒரு சேவகன் என்ற வகையில் அவர்களுக்கு பின்னே சென்று குரல் கொடுப்பவன் என்ற வகையில் நான் அம்பாறை மாவட்டத்தின் தலைவியாக இருக்கின்ற உடன்பிறவா சகோதரி அதுவும் ஒரு போராளி செல்வராணியை மனதார பாராட்டுகின்றேன்.

அனைவரும் இணைந்து நாங்கள் கார்த்திகை 27 அன்று எங்களது உணர்வுகளை வெளிக்கொண்டு வர வேண்டும் என நான் உங்கள் வீட்டு பிள்ளையாக உங்களிடம் வேண்டுகிறேன்.– என்றார்.





# போலித் தேசியவாதிகளின் ஏமாற்று வேலைகளால் யாழ்ப்பாண மக்களுடைய இருப்புப் பூச்சியமாகும்!

## வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

இன்று இருக்கக்கூடிய போலித் தேசியவாதிகளுடைய ஏமாற்று வேலைகள் தொடருமானால் இன்னும் முப்பதே வருடங்களில் யாழ்ப்பாண மக்களுடைய இருப்பும் அதேநேரம் நாடாளுமன்ற பிரதிநிதித்துவமும் பூச்சியமாகும்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளருமான அங்கஜன் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜனநாயக தேசிய கூட்டணியின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

5 வருடங்களுக்கு ஒரு முறை உணர்ச்சி அரசியல் பேசுபவர்களால் யாழ். மாவட்டத்தினுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் 14 வருடங்களில் மூன்றால் குறைவடைந்துள்ளது.

இதேநிலைமை தொடர்ந்தால் முப்பது வருடங்களில் யாழ்ப்பாண மக்களுடைய இருப்பும் அதேநேரம் நாடாளுமன்ற பிரதிநிதித்துவமும் பூச்சியமாகும் என கருத்துக்கணிப்புக்கள் கூறுகின்றன.

நாம் சிலரை சாகும்வரை நாடாளுமன்றம் அனுப்பி அழகு பார்த்தோம். ஆனால் அவர்கள் எம் மக்களுடைய வாழ்க்கையோடு விளையாடி விட்டுச் சென்றுள்ளனர்.

இன்று சிலர் நவீன தமிழ்த்தேசியம் என்று அபிவிருத்தியைப் பற்றியும் பேசுகின்றனர். ஆனால் நாம் 2010 இல் ஆரம்பித்து 2024வரை ஏராளம் அபிவிருத்திகளைச் செய்து விட்டோம். வெறுமனே ஒன்றரை வருடத்தில் 45 ஆயிரம் லட்சம் ரூபாவை யாழ். மாவட்ட அபிவிருத்திக்காகக் கொண்டு வந்து குவித்தோம். நாம் செயலில் காட்டுகிறோம். சிலரோ வாயால் பேசி விட்டு கடந்து செல்கின்றனர்.

24 பேர் ஒன்றாக இருக்கும் போது எதனையும் சாதிக்க முடியாதவர்கள் 24 துண்டுகளாக பிரிந்து நிற்கும் போது எதனைச் சாதிக்கப் போகின்றனர்?

அவர்கள் பதவி அதிகாரத்தில் தான் அக்கறையாக இருக்கின்றனரே தவிர மக்களில் அக்கறை உள்ளவர்களாக இல்லை.

இவர்கள் வீடு, சைக்கிள், மான், சங்கு, மாம்பழம் என தற்போது பிரிந்து நிற்கின்றனர்.

எதிர்காலத்திலும் எலி, பூனை, கரடி என வருவார்கள். ஆனால் புலி வந்தால் நிச்சயமாக ஓட்டம் பிடிப்பார்கள். இவ்வாறு ஏமாற்றிப் பிழைப்பவர்களுக்கு மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்.– என்றார்.








# சுகாதார மேம்பாட்டு வேலைத்தளங்களை மதிப்பீடு செய்யும் விசேட வேலைத்திட்டம்

(மாளிகைக்காடு)

சுகாதார அமைச்சின், சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப் புரைக்கு அமைவாக கல்முனை பிராந்தி யத்தில் உள்ள சுகாதாரத்தை மேம்படுத் தும் வேலைத்தளங்களை மதிப்பீடு செய்யும் வகையில் விசேட வேலைத்திட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டு வருகி றது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள சாய்ந்தமருது பிரதேச செயலகத்தை மதிப்பீடு செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் சுகாதார மேம்பாட்டை மதிப்பீடு செய்யும் பொருட்டு அவர்களின் உடல் திணிவுச் சுட்டி, இரத்த அழுத்த அளவீடு, பல் மருத்துவ சேவை உள்ளிட்ட இரத்தப் பரிசோதனைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிராந்திய சுற்றுச் சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம்.றயீஸ், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எம்.எச்.சனூஸ் காரியப்பர், பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஹபீப் முஹம்மட் உள்ளிட்ட சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சுகாதாரத்தை மேம்படுத்தும் மதிப் பீட்டு அறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து சாய்ந்தமருது பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முஆபிக்கா, நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்சான் ஆகியோருடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.



# எமது இனத்துவத்தை மறைத்து இலங்கையர் ஆகிவிட முடியாது!

## வேட்பாளர் கேசவன் சயந்தன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

எமது இனத்துவத்தை மறைத்து இலங்கையர்கள் என்ற ஒற்றைப் போர் வைக்குள் எம்மால் புகுந்து கொள்ள முடியாது.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற தேர்தல் வேட் பாளர் கேசவன் சயந்தன் தெரிவித் துள்ளார்.

சனிக்கிழமை சாவகச்சேரி நகரில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத் தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த முறை பொதுத் தேர்தல் ஒரு திருப்புமுனையானதாகவும் முக்கியமா னதாகவும் காணப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தெற்கில் ஏற்பட்ட மாற்றம் வழக்கத்துக்கு மாறான ஒன்று. அவ்வாறு புதிதாக வந்த ஜனா திபதி இலங்கையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தவிருப்பதாகக் கூறுகிறார். அந்த புதிய மாற்றத்தில் சகல பிரஜைக ளும் சம உரிமையோடு வாழ்வார்கள் எனக் கூறுகிறார்.

அவர் சொல்ல முனைவது என்ன வென்றால் இனத்துவ அடையாளம் எதிர்காலத்தில் இல்லை. அனைவரும் இலங்கையர்கள் என்ற ஒற்றைப் போர் வைக்குள் புகுந்து கொள்ள வேண்டும்,

அந்தப் போர்வைக்குள் அவர் எம்மை மூடி வைக்க நினைக்கிறார். இலங்கை முழுவதும் ஒரே இனம் ஒரே மக்கள் என்பதனை நிரூபிக்க அவர் முனைகிறார். நாம் அவருடைய நிலைப் பாட்டுக்கு உடன்பாடு கொண்டவர்கள் அல்ல.

எமக்கு வடக்கு-கிழக்கு என்ற மரபு வழித் தாயகம் இருந்தது. எமக்கென்று தனியான இன, மத, மொழி, பண்பாட்டு அடையாளங்கள் இருந்தன. நாம் ஓர் தனித்துவமான மக்கள் கூட்டம். தனித்து வமான இனம்.

இந்த நாட்டில் சிங்களவர்கள் எப்படி தனித்துவமான மக்கள் கூட்டமாக, தேசிய இனமாக இருக்கின்றனரோ. அது போலவே நாமும் ஒரு தமிழ்த் தேசிய இனமாக வாழ வேண்டும்.

நாம் ஒரு தேசிய இனமாக,சிங்கள மக்களுக்கு இருப்பது போன்ற சகல உரிமைகளோடும், அந்தஸ்தோடும், தனித்துவமாக இந்த நாட்டில் வாழ விரும்புகிறோம். அதனைச் செய்ய முடியுமானால் செய்யுங்கள். அது ஓர் பெரிய மாற்றமாக இருக்கும். அதை விடுத்து விலை மாற்றம், ஊழல் மாற் றம், ஆட்சி முறை மாற்றம் உள்ளிட்ட மாற்றங்கள் எமக்கு எந்த விதத்திலும் நன்மை பயக்காது.- என்றார்.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# மணிப்பூரில் பெண்கள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் உயிரிழப்பு



மணிப்பூரில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த பெண்கள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மணிப்பூர் மாநிலம் விஷ்ணுபூர் மாவட்டம் சைடோன் கிராமத்தில் உள்ள வயலில் சுமார் 20 பெண்கள் நெல் அறுவடை பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அடையாளம் தெரியாத மர்ம நபர் ஒருவர் அந்த பெண்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுவிட்டு அருகில் உள்ள வனப்பகுதிக்குள் சென்றுள்ளார் என கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் சபம் சோபியா (வயது 27) என்ற பெண் உயிரிழந்துள்ளார். இதையடுத்து, அங்கிருந்த பெண்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். பின்னர் அந்த கிராமத்தைச் சேர்ந்த தன்னார்வலர்கள் உயிரிழந்த அந்தப் பெண்ணின் உடலை மீட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்த பொலிஸாரும் மத்திய பாதுகாப்புப் படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

இதுகுறித்து காவல் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது,

“சம்பவம் நடந்த இடம் வனப்பகுதிக்கு மிக அருகில் உள்ளது. இதனால், துப்பாக்கியால் சுட்டவர் வனப்பகுதிக்குள் ஓடி ஒளிந்து கொண்டுள்ளார். மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தீவிரவாதிகள் இதுபோன்ற செயலில் ஈடுபட்டிருக்கலாம். இதுகுறித்து விசாரணை நடத்தி வருகிறோம்.” – என்றார்.

முன்னதாக, ஜிரிபம் மாவட்டத்தில் கடந்த 7 ஆம் திகதி இரவு 31 வயது பெண்ணை ஆயுதம் ஏந்திய கும்பல் தாக்கியதுடன் அவரை தீயிட்டு கொளுத்திவிட்டு தப்பி ஓடியது. அந்தப் பெண்ணின் கணவர் கொடுத்த புகாரின் பேரில் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காஷ்மீரில் தீவிரவாதத்தை தூண்ட முயற்சி: சமூக ஊடகங்களை பயன்படுத்தும் பாகிஸ்தான்



ஜம்மு காஷ்மீரில் மீண்டும் தீவிரவாதத்தை தூண்ட, சமூக ஊடகங்களில் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகள் வெளியிடுவது கடந்த ஒரு மாதமாக மிகவும் அதிகரித்துள்ளதாக இந்திய உளவுத்துறை கூறியுள்ளது.

காஷ்மீரில் ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாதி புர்ஹன் வானி கடந்த 2016 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார். அதன்பின் தீவிரவாத இயக்கங்களில் காஷ்மீர் இளைஞர்கள் சேர்வது பெருமளவில் குறைந்தது. தற்போது காஷ்மீரில் உள்ளூர் தீவிரவாதிகளின் எண்ணிக்கை 30 ஆகவும், வெளிநாட்டு தீவிரவாதிகளின் எண்ணிக்கை 75 முதல் 80 ஆக இருக்கும் என கூறப்படுகிறது.

தற்போது சமூக ஊடகங்கள் மூலம் தீவிரவாத இயக்கத்துக்கு ஆள் சேர்க்கும் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த குளிர் காலத்தில் ஆட்களை தேர்வு செய்து, அடுத்தாண்டு கோடை காலத்தில் தீவிரவாத தாக்குதல்களை அதிகரிக்க பாகிஸ்தான் தீவிரவாத இயக்கங்கள் தீவிர முயற்சி எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரில் கடந்த சில ஆண்டுகளாக தீவிரவாத இயக்கங்களுக்கு நிதி வருவது தடுக்கப்பட்டது. தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளிப்பவர்களுக்கு அரசு வேலைகள், கடவுச்சீட்டுகள், சாரதி உரிமம் ஆகியவை மறுக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாக தீவிரவாத இயக்கங்களுக்கு ஆட்கள் சேர்க்கும் நடவடிக்கைகள் குறைந்தன.

ஆனால், தற்போது தீவிரவாத இயக்கத்துக்கு ஆட்களை சேர்க்கும் முயற்சிகள் சமூக ஊடகங்களில் அதிகரித்துள்ளது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இந்தியாவுக்கு எதிராக 2,016 தகவல்கள் பேஸ்புக், எக்ஸ், டெலிகிராம், டார்க் வெப் போன்ற சமூக ஊடகங்களில் பரவியுள்ளது. இது கடந்தாண்டின் இதே காலத்தில் 89 தகவல்கள் மட்டுமே வெளியாகியிருந்தன. தற்போது 22 மடங்கு அதிகரித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரில் புதிய அரசு ஆட்சிக்கு வந்துள்ளது, பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகளுக்கு தைரியத்தை கொடுத்துள்ளதா என பாதுகாப்பு முகமைகள் ஆய்வு செய்து வருகின்றன. காஷ்மீரில் பொலிஸாரின் கட்டுப்பாடு துணை நிலை ஆளுநரிடம் இருந்தாலும், காஷ்மீரில் மீண்டும் தீவிரவாதத்தை தூண்டலாம் என்ற எண்ணம் தீவிரவாத அமைப்புகளிடம் ஏற்பட்டுள்ளது போல் தெரிவதாக பாதுகாப்பு படை அதிகாரிகள் கருதுகின்றனர்.

சமீபத்தில் நடைபெற்ற காஷ்மீர் தேர்தலில் ஜமாத்-இ-இஸ்லாமி அமைப்பின் தலைவர்கள் தேர்தலில் ஈடுபட்டனர். இவர்கள் மூலமாக காஷ்மீரில் மீண்டும் தீவிரவாதத்தை தூண்ட பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. திட்டமிட்டுள்ளதாக இந்திய உளவுத்துறை சமீபத்தில் எச்சரிக்கை விடுத்தது.

பாகிஸ்தான் பகுதியிலிருந்து காஷ்மீருக்குள் ட்ரோன்கள் பறந்து வருவதும் அதிகரித்துள்ளது எனவும், இந்தாண்டில் இதுவரை 40 ட்ரோன்கள் கண்டறிப்பட்டதாகவும் இந்திய பாதுகாப்பு படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.






## கனடா கோயிலில் இந்துக்கள் தாக்கப்பட்ட விவகாரம்:

# காலிஸ்தான் அமைப்பாளர் இந்தர்ஜீத் கோசல் கைது

கனடாவில் உள்ள கோயிலில் கடந்தவாரம் இந்துக்கள் தாக்கப்பட்டது தொடர்பாக காலிஸ்தான் ஆதரவு போராட்ட அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் இந்தர்ஜீத் கோசலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவின் டொராண்டோ மாகாணத்துக்கு உட்பட்ட பிராம்ப்டன் பகுதியில் இந்து மகா சபைக்குசொந்தமான கோயில் உள்ளது. இங்கு, இந்திய தூதரகம் சார்பில் இந்தியர்களுக்கு சான்றிதழ் வழங்கசிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த வாரம் திங்கள்கிழமை காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர்.

அப்போது, இந்து கோயிலுக்கு வந்த பக்தர்கள் மீது அவர்கள் திடீர் தாக்குதல் நடத்தினர். காலிஸ்தான் கொடிக் கம்பங்களை வைத்து, பெண்கள், குழந்தைகள் மீது அந்த கும்பல் பயங்கர தாக்குதல் நடத்தியது. இதில் பலர் படுகாயம் அடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அங்குள்ள எதிர்க்கட்சி தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் மீதுகடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக பீல் மண்டல பொலிஸார் வெளியிட்ட அறிக்கை,

‘இந்துக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் பிராம்ப்டனைச் சேர்ந்த இந்தர்ஜீத் கோசல் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது ஆயுதங்களை வைத்து தாக்குதல் நடத்தியதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் ஒரு சில நிபந்தனைகளின் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார். ஒன்டாரியோ நீதிமன்றத்தில் கோசல் ஆஜர்படுத்தப்படுவார்.” – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குர்பத்வந்த் சிங் பன்னுனின் சீக்கியர்களுக்கான நீதி இயக்கத்தின் கனடா பிரிவு அமைப்பாளராக செயல்பட்டு வந்தவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார். இவர் பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் உள்ள சரேயில் கடந்தாண்டு ஜுன் 18 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து, அந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டவர்தான் இந்த இந்தர்ஜீத் கோசல்என்று கூறப்படுகிறது. இவர், இந்தியாவுக்கு எதிராக அங்குள்ள தூதரகத்தின் முன்பு பல போராட்டங்களை முன்னெடுத்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது..




# கியூபாவில் அடுத்தடுத்து இருமுறை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பதிவு!

கிழக்கு கியூபாவில் நேற்று 6.8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச்சேதம் ஏற்பட்டதா என்பது குறித்து உடனடி தகவல் ஏதும் வெளியாகவில்லை என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சாண்டியாகோ டி கியூபா, ஹோல்குயின் மற்றும் குவாண்டனாமோ போன்ற பெரிய நகரங்கள் உட்பட கியூபாவின் கிழக்குப் பகுதி முழுவதும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

அருகில் உள்ள ஜமைக்காவில் உள்ள உள்ளூர் ஊடகங்களும் அதிர்வுகளை உணர்ந்ததாகத் தெரிவித்துள்ளன.

நிலநடுக்கம் காரணமாகப் பெரிய சேதம் அல்லது காயங்கள் ஏற்பட்டதாக உடனடி தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

நிலநடுக்கத்தின் மையம், கியூபாவின் பார்டோலோம் மாசோவில் இருந்து 25 மைல் (40 கிலோ மீற்றர்) தெற்கே அமைந்திருந்ததாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை ரபேல் புயல் வடக்கு கியூபாவை கடுமையாகத் தாக்கியதில், நூற்றுக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்தன.

இந்த நிலையில் தற்போது நிலநடுக்கம் கியூபாவைத் தாக்கியுள்ளது.

ஒக்டோபர் மாத இறுதியில் மின் உற்பத்தி நிலையம் செயலிழந்ததால் மக்கள் இருளில் சிக்கித் தவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 02

கனடா முரசு

திங்கட்கிழமை 11/11/2024

## கனடாவில் முதல் தடவையாக எச் 5 பறவை காய்ச்சல் அடையாளம்

கனடாவில் எச் 5 பறவை காய்ச்சலுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கனடாவின் தென் பிராந்தியமான பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திலுள்ள

02▶





# கனடா தூதரகம் முன்பு சீக்கியர்கள் போராட்டம்

**கனடாவில் இந்து கோயில்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து டில்லியில் கனடா தூதரகம் முன்பு நேற்று சீக்கியர்கள் போராட்டம் நடத்தினர்.**

**இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியும் கனடா குடியுரிமை பெற்ற காலிஸ்தான் தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஆண்டு கனடாவில் கொல்லப்பட்டார்.**

இந்த கொலை வழக்கில் இந்திய தூதரக அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக அந்த நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். இதை இந்தியா மறுத்தது. இதனால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனால் இரு நாடுகளுக்கிடையே அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது.

இந்த சூழலில் கனடாவின் பிராம்டன் நகரில் உள்ள இந்து சபா கோயில் மீது கடந்த 3 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது. மேலும் அந்நாட்டில் உள்ள சில இந்து கோயில்கள் மீதும் இந்துக்கள் மீது தாக்குதல் நடந்தது. இந்த தாக்குதலில் காலிஸ்தான் ஆதரவு அமைப்புகளுக்கு தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த தாக்குதலைக் கண்டித்து, இந்து சீக்கிய உலக அமைப்பு சார்பில் டில்லியில் உள்ள கனடா தூதரகம் முன்பு நேற்று போராட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான சீக்கியர்கள் கலந்து கொண்டனர்.

இதையடுத்து அப்பகுதியில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர். டீன் மூர்த்தி மார்க் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அப்போது அங்கு பொலிஸார் வைத்திருந்த தடுப்புகளை மீற போராட்டக்காரர்கள் முயன்றனர்.

இதுகுறித்து இந்து சீக்கிய உலக அமைப்பின் தலைவர் தர்விந்தர் சிங் மர்வா கூறும்போது,

“நாங்கள் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம் என்பதை கூறவே இங்கு கூடியுள்ளோம். உண்மையான சீக்கியர் ஒருபோதும் காலிஸ்தானியாக இருக்க மாட்டார். காலிஸ்தான் தனி நாடு கோரிக்கையில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. நமது மூவர்ணக் கொடியும் நமது நாடும் எல்லா நேரங்களிலும் மதிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இந்தியாவைச் சேர்ந்த சீக்கியர்கள் இந்தியாவுக்கு ஆதரவாக உள்ளனர். காலிஸ்தானை நாங்கள் ஆதரிக்கவில்லை” - என்றார்.

# Fast-track மாணவர் விசாவை நிறுத்தியது கனடா அரசு

கனடா அரசு, திடீரென நேற்று பிரபலமான மாணவர் விசா திட்டம் ஒன்றை நிறுத்திவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

கனடா அரசு, மாணவர்கள் விரைவாக கல்வி விசா பெற உதவும், Student Direct Stream (SDS) என்னும் திட்டத்தை திடீரென முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

அதாவது, நவம்பர் மாதம் 8ஆம் திகதியுடன் இந்த திட்டம் முடிவுக்கு வந்துவிட்டது.

வழக்கமாக மாணவர்கள் கல்வி விசா பெற 2 முதல் மூன்று மாதங்கள் ஆகும் நிலையில், இந்த SDS திட்டம் மூலம், சில நிபந்தனைகளின் பேரில், 4 முதல் 6 வாரங்களுக்குள் விசா பெற்றுவிடலாம்.

வீடு தட்டுப்பாடு பிரச்சினை மற்றும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதாகக் கூறி, கனடா அரசு சர்வதேச மாணவர்களுக்கு பல கட்டுப்பாடுகளை விதித்துவரும் நிலையில், தற்போது Student Direct Stream திட்டத்தையும் திடீரென முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.





# கனடாவில் இந்துக் கோயில் மீது தாக்குதல்: கைது செய்யப்பட்டவருக்கு நிபந்தனை பிணை

கனடாவில் கடந்த வாரம் இந்துக் கோயிலில் பக்தர்கள் மீது நடந்த தாக்குதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட காலிஸ்தான் அமைப்பின் ஒருவரை நீதிமன்றம் நிபந்தனை பிணையில் விடுவித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடாவின் பிராம்டன் நகரில் இந்து மகா சபைக்கு சொந்தமான கோயில் ஒன்று உள்ளது.

அந்தப் பகுதியில் இந்திய தூதரகம் சார்பில் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர்.

அத்துடன், இந்து மகா சபை கோவிலுக்கு சென்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட பக்தர்களை காலிஸ்தான் பிரிவினைவாதிகள் தாக்கினர். அதேநேரம், இதனை கண்டித்து இந்துக்களும் சீக்கியர்களும் ஒன்றுபட்டு தெருக்களில் பேரணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், இந்த சம்பவங்கள் தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்த நிலையில் 4 பேரை கைது செய்தனர்.

அவர்களில், காலிஸ்தான் உறுப்பினரான ஹர்தீப் சிங் நிஜ்ஜாருக்கு வேண்டப்பட்ட காலிஸ்தான் அமைப்பை சேர்ந்த இந்தர்ஜீத் கோசால் என்ற நபரும் அடங்குகின்றார் என தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில்,

“ கடந்த 8 ஆம் திகதி கோசாலை கைது செய்தோம். ஆயுதங்களால் தாக்கப்பட்டதாக அவன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டான். ஒண்டாரியோ நகர நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும்போது அவர் முன்னிலையாவார்.” என்று குறிப்பிட்டுள்ளார்.




# கனடாவில் ஒக்டோபர் மாதம் 15 ஆயிரம் தொழில் வாய்ப்புகள் அறிவிக்கப்பட்டன

கனடாவில் கடந்த ஒக்டோபர் மாதம் 15 ஆயிரம் தொழில் வாய்ப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கண்டிய புள்ளி விபரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

வியாபாரம், கட்டுமானம் மற்றும் உதவி சேவைகள் துறைகளில் அதிக அளவு தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நிதி காப்புறுதி, வீட்டுமனை, வாடகை மற்றும் குத்தகை போன்ற தொழில்துறைகளில் பின்னடைவு பதிவாகியுள்ளது.

கூடுதல் எண்ணிக்கையில் குறித்த துறைகளில் தொழில் வாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் மேற்படி வைரஸ் கண்டறியப்பட்டமை இதுவே முதல் தடவையாகும் என அந்நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

